*பாகம் 02 (வீடுகள் 06 தொடக்கம் 10 வரை)*

## வீடு: 06 – விக்காவில் (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

எனது வீட்டுக்கிணறு மூடு கிணறாக இருக்கின்றது. எனது வீட்டிற்கு முற்றம் போதாதிருப்பதால் கிணற்றை மூடு கிணறாக பாவனை செய்யப்படுகின்றது. மோட்டார் மூலம் நீர் கிணற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. மேலும் எமது கிணற்றின் ஒரு பகுதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டு இருக்கின்றது. இக்கிணறு வெட்டப்பட்ட காலத்தில் கிணற்று நீர் உவர் நீராகவே காணப்பட்டது. இதற்காக நான் எட்டு வருட காலமாக வீட்டின் மூன்று பக்கமும் பீலி அமைத்து அதன் மூலம் வரும் மலை நீரை இக் கிணற்றுக்குள் கிணற்று நீரின் மேலேதான் மழைநீரை விட்டு வந்தேன். விட தொடக்கி மூன்று வருடங்களின் பின் எமது கிணற்று தண்ணீரில் பாரிய மாற்றம் ஏற்பட்டு அது இன்றுவரை தொடர்வது எமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. அது என்னவென்றால் சோறு சமைக்கும் அளவிற்கு எமது கிணற்று நீர் நன்னீராக மாறிவிட்ட்து. இருப்பினும் நாம் சோறு சமைப்பதில்லை. பொதுமக்கள் பாவனைக்காக கிணற்றின் ஒருபகுதி திறந்திருப்பதால் பொதுமக்கள் அக்கிணற்றை வீட்டு தோட்டத்திற்கான நீர் தேவை மாற்றுக அன்றாட தேவைகளுக்காக அக்கிணற்றை பயன்படுத்துவதாலும் சுகாதார நலன்கருதி நாம் சோறு சமைப்பதில்லை. இருப்பினும் நாம் எமது வீட்டு திருத்த வேலைக்காக வீடு கழட்டி வேலை செய்து ஆறு மாதத்தின் பின்னர் தற்போது வீட்டின் முன்பக்கத்திற்கு மாத்திரம் பீலி அமைத்து அதனூடாக வரும் மலை நீரை இன்னும் கிணற்றுக்குள் விடவில்லை. பூங்கன்றுகள் இதர தேவைக்கு பயன்படுத்துகிறோம்.









## வீடு: 07 – விக்காவில் (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

எமது கிணறு வெட்டப்பட்ட காலத்தில் உவர் நீராக காணப்பட்டது. எனினும் மழைநீரை கிணற்றுக்குள் விட்டால் எமது கிணற்று நீர் நன்னீராக மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இருப்பினும் நான் எனது நம்பிக்கையை கைவிடவில்லை. 2015 ம் ஆண்டு வீட்டின் முன் பகுதிக்கு மாத்திரம் பீலி அமைத்து அதனூடாக வரும் மழைநீரை கிணற்றின் தண்ணீரின் மேலே விட்டு வருகிறேன். இது இன்று எமக்கு ஒரு நன்மையை தந்திருக்கின்றது. அது என்னவென்றால் நாம் சோறு சமைப்பதில் இருந்து சகல வேலைகளையும் இக்கிணற்று நீரில்தான் மேற்கொண்டு வருகின்றோம். குடி நீரைத் தவிர எமக்கு இவ்வாறு மழைநீரை விட்டு எமது கிணறு நன்னீராக மாறியது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.







## வீடு: 08 – பொன்னம்பலம் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

எமது கிணறு வெட்டிய காலத்திலிருந்து உவர்நீராக இருந்தது. எமக்கு சிலர் சொன்னார்கள் உங்கள் கிணறு வீட்டிற்கு அருகாமையில்தானே இருக்கின்றது நீங்கள் மழைநீரை விட்டு பாருங்கள். சிலவேளைகளில் உங்கள் கிணற்று நீர் நன்னீராக மாறும் என்றார்கள். அதிலிருந்து நான் மழைநீரை பீலி மூலமாக கிணற்றுக்குள் விடும் வீடுகளை சென்று பார்த்தேன். எனினும் அவர்களின் முறையைவிட சற்று வித்தியாசமாக அதாவது சுகாதார நன்மை கருதி வடிகட்டி விடுவோம் என யோசித்தேன். அதற்கமைய கடந்த மூன்று வருடங்களாக வீட்டின் முன்பக்கம் மட்டும் பீலி அமைத்து அதனால் வரும் மழைநீரை நிலத்திற்கு கீழ் ஒரு வாக்கு கட்டி அந்த வக்கீல் வரவிட்டு பின்னர் வடிகட்டி அதாவது கொஞ்சலகள் கிணற்றுக்குள் செல்லாது வெறும் மழைநீரை மாத்திரம் கிணற்றுக்குள் விட்டு வருகின்றேன். பாரிய ஒரு மாற்றத்தை என்னால் உணர முடிந்தது. அது என்னவென்றால் காரைநகரில் இருந்து கொண்டு எமது கிணற்றுநீரை எடுத்து நாம் சோறு சமைப்போம் என்று ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை. அதற்க்கு மாறாக தற்போது மாரி காலத்தில் மழைபெய்தால் சோறு சமைப்பது எனது வீட்டின் கிணற்று நீரில்தான். பின்னர் படிப்படியாக சற்று உவர் கூடும். எனினும் தற்போது நாம் குளிப்பது உடுப்பு தோய்ப்பது யாவும் எமது கிணற்றில்தான். வருடம் போக போக நமது கிணற்றில் பாரிய மாற்றம் ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.












## வீடு: 09 – பொன்னம்பலம் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

எமது கிணறு வெட்டியது முதல் உவர்நீராக இருந்தது. அப்பொழுது நான் யோசித்தேன் எமது கிணற்று நீர் இரண்டு ஊற்றுக்களால் வருகின்றதை மாற்றலால் என்று. அது என்னவென்றால் எனது கிணற்றை இறக்கும் பொது ஒருபக்கத்தால் ஓரளவு நன்னீரும் மற்றொரு பக்கத்தால் உவர்நீரும் வந்து நிரப்புவதை நான் அவதானித்தேன். இத்தோடு மழைநீரை கிணற்றுக்குள் விடடால் முழுவதுமாக நன்னீராக மாற்றலாம் என எண்ணினேன். அதன்படி வீட்டின் ஒருபக்கம் பீலி பூட்டி மழைநீரை விட்டு வருகின்றேன். கடந்த எட்டு வருடங்களாக மழைநீரை விட்டு இரண்டு வருடங்களிற்கு பிற்பாடு எனது கிணற்றில் இருந்து ஒரு மாற்றத்தை கண்டேன். இப்போதும் எனது கிணற்றில் இருந்து மேலாலே தண்ணீர் கிள்ளினாள் நன்னீராக இருக்கின்றது. சற்று கீழே வாழியை போட்டு அள்ளினால் சற்று உவர் காணப்படுகிறது. இருப்பினும் நான் எனது கிணற்றுக்குள் நெல்லி மாற தடியினை வெட்டி வந்து போட்டேன் அதிலும் சிறிய மாற்றத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. அதாவது உவர்நீர் மாரி நன்னீர் வருவதை. எனினும் நாம் எமது அன்றாட செயல்பாடுகளிற்கு வேறு கிணறு நாடாமல் குளியல் வீட்டு தேவை உடுப்பு தோய்த்தல் போன்ற செயல்பாடுகளிற்கு எமது கிணறு நன்னீராக இருப்பதால் பாவித்து வருவது எமக்கு சந்தோசத்தை அளிக்கின்றது.










## வீடு: 10 – வெடியரசன் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

எமது கிணற்றுநீர் உவர்நீராகத்தான் கடந்த ஒன்பது வருடங்களிற்கு முன்னர் இருந்தது. எனினும் நாம் எமது வீட்டில் ஒருபக்கத்திற்கு பீலி அமைத்து அதன்மூலம் வரும் மழைநீரை எமது கிணற்றுக்குள் விட்டு வருகின்றோம் ஒன்பது வருடங்களாக. அவ்வாறு மழைநீர் விட்டு இரண்டு மூன்று வருடங்களில் எமது கிணறு மாற்றம் அடைந்தது. அதாவது நன்னீராக மாறியது. இதை நாம் நினைத்துக்கூட பார்க்கவில்லை எமது கிணற்றில் இப்படி ஒரு மாற்றத்தை. இருப்பினும் கடும் வறட்சி காரணமாக எமது கிணற்றுநீர் கடந்த மூன்று வருடங்களிற்கு முன்னர் வற்றியது. இருப்பினும் நாம் மீண்டும் கிணற்றை இரண்டு ஆதி பதித்து கிண்டினோம். அதன்பிறகு கிணற்றுக்குள் தண்ணீர் நிற்கின்றது. இப்பவும் நாம் மாரிகாலங்களில் மற்றும் மாசி மாதம் வரை எமது கிணற்றில் தான் சோறு சமைப்பது அதன்பின் சமைப்பதில்லை. பின்வரும் மாதங்களில் உடுப்பு சலவை குளியல் போன்ற பாவனைகளுக்கு பாவித்து வருகின்றோம்.







பாகம் 03 தொடரும்..........